RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2419

OPEN ACCESS

# தமிழ் நவீன நாடகங்களில் பெண்கள்

**பொன். பூஞ்சோலை [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வானூர்-605111, தமிழ்நாடு, இந்தியா.

# Women in Tamil Modern Drama

**P. Poongholai [a, *]**

[a] Department of Tamil, Government arts and science College.vanur-605111, Tamil Nadu, India

* Corresponding Author: poongholaik@gmail.com

Received: 18-10-2023
Revised: 30-12-2023
Accepted: 14-01-2024
Published: 20-01-2024

Check for updates

**ABSTRACT**

Tamil modern dramas have made a huge impact on people's minds. Through the characters the author provides some ideas to the society. All these opinions and ideas are received from people. Myths and legends are recreated. As these are recreated, the position of the people living in the society is revealed. Mythology takes over the position of women in modern drama. The purpose of this article is to examine the way in which women emerge through narratives in drama in the restoration phase.

**Keywords:** Tamil Drama, Myths, Women Life, Recreation

## முன்னுரை

தமிழ் நவீன நாடகங்கள் மக்கள் மனங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சமூகத்திற்கு தேவையான கருத்துக்களை பாத்திரங்கள் வாயிலாக இவை வெளிப்படுத்துகின்றன. இக்கருத்துகள் யாவும் மக்களிடமிருந்தே பெறப்படுகிறது. புராணங்கள், தொன்மங்கள் ஒவ்வொன்றும் மீட்டுருவாக்கம் செய்யப்படுகின்றன. இக்கதைகள் மீட்டுருவாக்கம் செய்யப்படுவதால் சமுதாயத்தில் உள்ள மாந்தர்களின் நிலைப்பாடு வெளிப்படுகின்றது. நவீன நாடகங்களில் பெண்களின் நிலையைத் தொன்மக் கதைகள் எடுத்தியம்புகின்றன. மீட்டுருவாக்க நிலையில் படுகளம் நாடகத்தில் பெண்கள் கதைகளின் ஊடாக வெளிப்படும் விதத்தை ஆராயும் நோக்கமாக இக்கட்டுரை அமைகின்றது.

## ந. முத்துசாமி

1974இல் நாற்காலிக்காரர் என்னும் தலைப்பில் தொகுப்பாகவும், 1980 இல் சுவரொட்டிகள் நாடகமும் க்ரியா வெளியீடாக இவர் எழுதிய நாடகங்கள் வெளிவந்தன. இவருடைய உந்திச்சுழி நாடகம் கூத்துப்பட்டறையினரால் சென்னை மியூசியம் தியேட்டரில் நடத்தப்பட்டது. காலம்காலமாக, நற்றுணையப்பன், அப்பாவும் பிள்ளையும், சுவரொட்டிகள், கட்டியக்காரன், படுகளம் போன்ற நாடகங்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

## படுகளம் நாடகம்

ந.முத்துசாமி எழுதிய இந்நாடகம் மகாபாரதத்தில் பதினெட்டாம் நாள் யுத்தமானது படுகளம் ஆகும். 18 நாட்களுக்கு மகாபாரதக் கூத்து நடக்கும். அப்பொழுது துரியோதனன் சிலையை மண்ணால்

செய்து தரையில் படுக்க வைத்திருப்பர். 18ஆம் நாள் இறுதியில் பீமன் துரியோதனனைச் சாகடிப்பான். நாடக மாந்தர் துரியோதனனும் சாவான். அதே சமயத்தில் மண்ணால் செய்து வைக்கப்பட்ட துரியோதனனும் வெட்டப்பட்டு அச்சிலையின் மண்ணை மக்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்வர். இவ்வாறு வழக்கமாகக் கொண்ட 'படுகளம்' என்னும் இந்நிகழ்ச்சியை ந.முத்துசாமி அவர்கள் நாடகமாக்கியுள்ளார்.

மேலும் படுகளம் நாடகத்தில் பெண்கள் நாடகக் கலையில் படும் துன்பங்களும், பாஞ்சாலி கூந்தல் முடிக்கப்படுவதும், பானுமதி கூந்தல் அவிழ்க்கப்படுவதும் காட்சிப்படுத்தப்பட்டு நாடகமாக வெளிப்பட்டுள்ளது. இப்படுகளம் நாடகம் நாடகத்தின் தொடக்கத்தில் பாஞ்சாலியின் புடவை துச்சாதனனால் உருவப்படுகிறது. உரிக்க, உரிக்க வந்து கொண்டே இருப்பதால் துச்சாதனன் களைப்பாகிறான். துரியோதனன் அவனை ஊக்குவித்துப் பாஞ்சாலியைக் கொண்டு வந்து தன் தொடையில் வைக்குமாறு கூறுகிறான். பாஞ்சாலியின் புடவையை உரிக்க முடியாமல் மயக்கம் போட்டு துச்சாதனன் விழுந்துவிடுகிறான்.

பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் இவர்கள் நால்வரும் சபதம் எடுக்கிறார்கள். அதாவது, பீமன் துரியோதனனையும், அர்ஜுனன் கர்ணனையும், நகுலன் சௌபாலனையும், சகாதேவன் சகுனியையும் கொன்று சபதம் நிறைவேற்றப்போவதாகக் கூறுகிறார்கள்.

எட்டாம் நாள் அர்ஜுனன் மகன் அரவானை நரபலி கொடுப்பதற்கான பலியாகத் துரியோதனன் அவனைக் கேட்கிறான். அரவானும் அதற்கு ஒப்புக்கொள்கிறான். இதனை அறியாத கிருஷ்ணனும் அவனிடம் கேட்க, தான் துரியோதனனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டதாக அரவான் கூறுகிறான்.

அமாவாசை அன்று இரவு ரணபத்ரகாளிக்குப் பலி கொடுத்து மறுநாள் யுத்தத்தை தொடங்க வேண்டும். ஒரே ஒரு நாள் தான் இடையிலே இருக்கிறது. அதற்குள் அன்று இரவாகிவிடவே சூரியன் சந்திரன் இருவரும் இதைப்பற்றி கிருஷ்ணனிடம் கேட்க வருகிறார்கள். கிருஷ்ணனும் நீங்கள் இருவரும் இன்று இணைந்து தானே உள்ளீர்கள் என்று அவர்களை மௌனமாக்குகிறான். அவர்கள் இருவரும் சென்று விடுகிறார்கள். அரவான் மூர்ச்சையாகி விட்டான். நினைவு தெளிந்து எழுந்தபோது 18ஆம் நாள் யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

இடையில் பீமன் - துரியோதனனின் உரையாடல்கள், சஞ்ஜயனம் திருதராஷ்டிரனும் காந்தாரியும் உரையாடுகிறார்கள். பீமனைப் பற்றிச் சஞ்ஜயன் கூற திருதராஷ்டிரனுக்குப் பீமன் மீது கோபம் வருகிறது. பானுமதியைப் பற்றிக் காந்தாரி பரிதாபப்படுகிறாள். துரியோதனன் பீமனிடம் அகப்படாமல் இங்கும் அங்கும் மறைகிறான். இறுதியில், துரியோதனன் பீமனால் சாகடிக்கப்பட்டதும் அவனுடைய தொடை இரத்தத்தைப் பாஞ்சாலி கூந்தலில் தடவுகிறாள்.

இதற்கிடையில் பாஞ்சாலியாகவும் பானுமதியாகவும் நடிக்க ஆண்கள் வேடமிடும் கொட்டகையும் காட்டப்படுகிறது. அதில் வேடமிட்டிருக்கும் இருவரையும் ஓலைத் தட்டியை நீக்கிவிட்டு அழகை பார்த்து ரசிக்கிறார்கள். பானுமதியும் திரௌபதியும் ஆண்களாக இருந்தாலும் பெண் வேடம் போட்டு இருப்பதால் அவர்களுடைய காலை வருடி விடுவது, பிடித்து விடுவதுமாக இருக்கிறார்கள். இறுதியில் பெண் வேடமிட்டவர்கள் கிண்டல் செய்பவர்களை வெளியேற்றி விடுகிறார்கள். அப்போது, மலம் கழிக்கும் இடத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை பற்றியும் பேசப்படுகிறது.

இறுதியில் துரியோதனன் இறந்ததும் பானுமதி அழுகிறாள். அதாவது பாஞ்சாலி கூந்தல் முடிந்து விட்டது, தன் கூந்தல் அவிழ்ந்து விட்டதே என்று அழுது ஒப்பாரி வைக்கிறாள். நாடகம் முடிகிறது. படுகளம் நாடகத்தில் நாடகத்துள் நாடகமாகக் கூத்துக் கலைஞர்களின் நிகழ்கால வாழ்வு மகாபாரதக் கதைப் பின்னணியில் சொல்லப்படுகிறது.

## பெண் நிலைப்பாடு

நாடகத்தில் பெண்கள் உறுப்பினர்களாக வருவது தவிர்க்க முடியாத ஒன்று. அப்படி இருக்கும் நிலையில் பெண் பாத்திரங்களை ஆண்கள் பெண்வேடம் போட்டு நடித்தாலும், அல்லது பெண்கள் நேரடியாக நாடகங்களில் நடித்தாலும் அவர்களுக்குப் பிரச்சனைகள் வந்து கொண்டே தான்

இருக்கின்றன. அதாவது, ஆண்களால் அவர்களுக்கு பிரச்சனைகள் ஏற்படுகின்றன. எனவே தான் நாடகக்கலையில் பங்குகொள்ள பெண்கள் அச்சப்படுகின்றனர்.

அது மட்டுமல்லாமல், சினிமா, நாடகம் முதலான கலைத்துறையில் பங்கு கொள்ளும் பெண் கலைஞர்களைச் சமூகம் மிகவும் கேவலமாகப் பார்க்கும் அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் சமூகத்தில் பார்வை வேறு மாதிரியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், அத்துறையில் பங்குபெறும் போதே, ஆண் கலைஞர்களாலும் வெளியிலிருந்தும் பெண் கலைஞர்களுக்கு பெருமளவில் தொல்லைகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு பெண்களுக்குத்தான் ஆண்களால் தொல்லைகள் என்றால், பெண் வேடமிட்டு நடிக்கும் ஆண்களையும் விட்டு வைக்கப்படுவதில்லை. இந்நாடகத்தில் பாஞ்சாலி, பானுமதி ஆகிய இருவரின் பாத்திரங்களை ஏற்று நடிக்கும் ஆண்கள், அப்பாத்திரங்களுக்கான வேடம் கட்டும் இடத்தில் ஐந்து ஆண்கள் வந்து பெண் வேடமிட்டிருக்கும் அவர்களைக் கேலி செய்கிறார்கள். அவர்களில் ஒருவன், "இலஏய்.... பெண்ணுங்கன்னா எல்லாரும் பிரமாதமாகத் தாண்டா இருப்பாங்க! நீ வெறுப்பா இருந்தேன்னா..... வத்தலோ சொத்தலோ பொண்ணுங்க எல்லாம் பிரமாதமாகத்தான் இருப்பாங்க..." (ந.முத்துசாமி, படுகளம், பக். 68, 69) என்கிறான்.

ஆண்களின் பார்வைக்குப் பெண்கள் எப்பொழுதும் போகப் பொருளாகவும் கவர்ச்சிப் பொருளாகவும் தெரிகிறார்கள். தலை முதல் பாதம் வரை பெண்களாக வேடமிட்டு இருப்பவர்களைக் கேலியாக வர்ணிக்கத் தொடங்கினார்கள். பெண் வேடமிட்டவர்களின் கதியே இப்படியென்றால், பெண்களின் நிலையென்ன? என்பதை இவற்றிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம்.

துரியோதனனால் அவமானப்படுத்தப்பட்ட திரௌபதியின் கூந்தல் துரியோதனனின் தொடை இரத்தத்தால் தான் முடிக்கப்பெறும் என்ற சபதத்தின் படி, துரியோதனன் பீமனால் கொல்லப்பட்டு அவனுடைய தொடையின் இரத்தத்தால் திரௌபதியின் கூந்தல் முடியப்படுகிறது.

துரியோதனன் பீமனால் அழிக்கப்படுகிறான். திரௌபதிக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்க துரியோதனனைக் கொன்று திரௌபதியின் கூந்தலை முடிவதில்லை இருந்த அக்கறை, துரியோதனன் இறந்ததால் அவள் மனைவி பானுமதியின் கூந்தல் அவிழ்க்கப்படுமே என்ற எண்ணம் பீமனுக்கு தோன்றவில்லை. அப்படி அவனுடைய எண்ணத்தில் தோன்றியிருந்தால் துரியோதனன் கொல்லப்பட்டிருக்க மாட்டான். திரௌபதியின் சபதமும் நிறைவேறியிருக்காது. அப்படி சபதம் நிறைவேறவில்லை என்றால் திரௌபதி பத்தினித் தெய்வம் என்று சமூகம் ஏற்றுக் கொண்டிருக்க முடியாது. ஆதலால், பானுமதியின் துயரத்தை எவரும் அறியவில்லை.

துரியோதனனைக் கொல்லாமல் விட்டிருந்தால் இன்று பாஞ்சாலியைத் தன்னுடைய தொடை மீது அமர ஆசைப்பட்ட துரியோதனனால் நாளை வேறு பல நிலையில் அவளுக்கு துன்பம் ஏற்படாது என்று என்ன நிச்சயம்? மேலும் திரௌபதிக்கு ஏற்பட்ட நிலை மற்ற சாதாரண பெண்களுக்கும் ஏற்படாதா?.

பானுமதியை நினைத்து மன்னித்து விட்டிருந்தால், ஐவருக்கு மனைவியாக இருந்தவளுக்கு மட்டுமல்லாமல் அரசு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே இந்நிலை என்றால் சாதாரண மக்களின் கதி என்னவாவது. மற்ற ஆண்களுக்கும் இதுபோன்ற தவறு செய்யத் தூண்டும். மேலும் துரியோதனனை அழிப்பதால் தான் பாண்டவர்களுக்கு பெருமை ஏற்படுகிறது. இல்லையென்றால், திரௌபதிக்கு ஏற்பட்ட அவமானத்தை ஐவர் இருந்தும் அரச அரசவையில் தான் கேட்க முடியவில்லை. பிறகும் அமைதியை நாடுவது கோழைத்தனம் என்று அவளுக்கு பதிவு உணர்வு ஏற்பட்டிருக்கும்.

இந்நாடகம் பாஞ்சாலி பானுமதி என்னும் மகாபாரதப் பெண் பாத்திரங்கள் அப்பெண் பாத்திரங்களின் வேடமேற்று நடிக்கும் ஆண் நடிகர்கள் பாலியல் பார்வைக்கு உட்படுத்துவதும், அவ்வாறு பெண் வேடமிட்ட ஆண் நடிகர்களை பெண்ணின் பிரச்சனைகளை ஆணாதிக்கச் சமூகத்தில் சொல்லாடலுக்கு உட்படுத்துவதாக இந்நாடகம் அமைந்துள்ளது. கூத்து வாழ்வில் ஈடுபட்ட கலைஞர்களின் நிகழ்காலச் சமூக குடும்பப் பிரச்சனைகளை மீண்டும் படுகளம் என்னும் பெயரில் நாடகமாக நிகழ்த்தும் பொழுது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று உண்டு. ஒரு சமூகம்

பெண்ணின் குரலுக்கு வெளி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்னும் கருத்தே ந.முத்துசாமியின் படுகளம் நாடகத்தில் வெளிப்படும் பெண் பற்றிய கருத்தாக்கங்களாக கொள்ள வேண்டும். துரியோதனனின் அழிவுக்கு பின்னர் திரௌபதியின் சபதம் நிறைவேறும் பொழுது பானுமதியின் கூந்தல் அவிழ்க்கப்படுகிறது. தவிர்க்க முடியாத ஒன்று என்பதனை உணர்த்தும் வகையில் நாடகம் முடிவடைகிறது.

## கரு.அழ.குணசேகரனின் நாடகம்

### 'பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு'

கரு. அழ.குணசேகரன் அவர்கள் தம்முடைய கல்லூரி நாட்களில் இருந்து நாட்டுப்புற இசை மற்றும் நிகழ்க்கலைகளை மேடைக் கலையாக மாற்றியவர். இவர் பல நவீன நாடகங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தியவர் பல நாடகங்களை இயக்கியும் அதில் நடித்தும் வந்துள்ளார். இவர் இயற்றிய நாடகங்களுள் சில, பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு, கனவுலகவாசி, தொட்டில் தொடங்கி, அறிகுறி, பலி ஆடுகள் எனப் பல நாடகங்களை எழுதியுள்ளார். சங்கரதாஸ் சுவாமிகள் 'பவளக்கொடி' என்ற நாடகம் எழுதியுள்ளார். அதில் சமய அழுத்தம் கொடுத்து கடவுள் பாத்திரங்களாகவே அவர் உணர்ந்து படைத்திருப்பார். இத்தொன்ம நாடகத்தினை மறுவாசிப்பு செய்யும் நோக்கில் இவர் 'பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு' என்னும் நாடகம் அமைந்துள்ளது.

பதினாறு காட்சிகளைக் கொண்ட இந்நாடகம் மேல்தளம், கீழ்த்தளம் என இரு மேடை அமைப்புகளைக் கொண்டு இரு நாடகங்களாக நிகழ்த்தப்படுகிறது.

முதலில் அல்லி தர்பாரில் மந்திரியைப் பார்த்து தமது தேசத்தின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை வினவுகிறாள். அவளுடைய மகன் புலந்திரன் அங்கு வந்து தனக்கும் தன் நண்பனுக்கும் விளையாடும் போது தேருக்காக வாக்குவாதம் நடந்து விட்டது என்றும் தனக்குப் பவளத்தேர் வேண்டும் என்றும் கேட்கிறான்.

பவளத்தேரைக் கொண்டுவர அர்ஜுன ராஜாவால் தான் முடியும். ஆதலால், அர்ஜுனனுக்கு, தங்கள் மகனுக்கு ஜன்னி வந்துவிட்டதாக ஓலை எழுதி அனுப்பலாமென்று தோழி ஒருத்தி கூறுகிறாள். இச்செய்தியை அர்ஜுனனுக்கு வேண்டாம் தர்மருக்கு அனுப்பலாம் என்று அல்லி முடிவு செய்கிறாள்.

இதற்கிடையில் தர்மராசா, பீமன், சகாதேவன் முதலானோர் தர்பாரில் வீற்றிருக்கிறார்கள். அர்ஜுனன் எங்கே இருப்பான் என்று தெரியவில்லை. அவனை அழைக்க வேண்டுமே என்று தர்மர் பீமனிடம் கூறுகிறார். பீமன் இதற்கு ஒரு யோசனையைக் கூறுமாறு சகாதேவனிடம் கேட்கிறான். சகாதேவன், தர்மண்ணாவுக்கு பாக்குச் சொக்கேறி மரணப்படுக்கையில் இருக்கிறார்; அர்ஜுன ராஜாவை பார்க்க விருப்பம் எனப் பறையடிக்கச் செய்தால் செய்தி கேட்டு அண்ணன் மேலுள்ள பாசத்தால் அர்ஜுனன் வந்து சேருவார் என ஆலோசனை சொல்கிறான்.

மற்றொரு காட்சியில் கிருஷ்ணனிடம் அல்லி, தன் கணவன் ஆண்டுக்கு ஒரு முறை வருவதாக தங்கள் முன்னிலையில்தான் கூறினார். ஆனால், அதன்படி நடக்காமல் பல பெண்களின் வீட்டிற்கு அர்ஜுனன் செல்கிறார் என்று கூறுகிறாள்.

அதற்கு அர்ஜுனன் அவளிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்கிறான். கிருஷ்ணனும் மணவாளன் பிழை செய்தால் மனைவி பொறுத்துக் கொள்வதே மனைவியின் கடமை என்று கூறுகிறான். பின்னர் தன் மகனுக்குப் பவளத்தேர் வேண்டுமென்றும் அதற்காக அவன் சாப்பிடாமல் இருப்பதாகவும் அல்லி கூறுகிறாள். அர்ஜுனன் இன்னும் 10 நாட்களில் பவளதேருடன் வருவதாகக் கூறிச் செல்கிறான்.

காட்டில் வேடனைப் பார்த்து பவளக்காடு எங்கு உள்ளது என்றும் யாருடையது என்றும் கேட்கிறான். அதற்கு வேடன், பவளக்கொடி என்பவளுடையது இக்காடு என்றும், அவள் மாதத்திற்கு இருமுறை இங்கு வருவதாகவும், அவள் மிகவும் அழகுடையவள், அவளை தொலைவில் இருந்து பார்த்துக் கொள்ளலாம் என்றும் அவளுக்கு அன்னப்பறவை பிடிக்குமென்றும் கூறுகிறான். அதனைக் கேட்டதும் அர்ஜுனனுக்கு அப்பேரழகியைப் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டு கிருஷ்ணனிடம்

கேட்கிறான். அதற்குக் கிருஷ்ணன் அர்ஜுனன் ஒரு கிழவனைப் போல மாறவேண்டும் என்றும் தான் ஒரு இளம் பெண் போல மாறி கூச்சலிடுவதாகவும், அதனைக் கேட்டு பவளக்கொடி அங்கு வருவாள் என்றும், அவள் வந்தால் அவன் அறியாது அவளைப் பார்த்துக்கொள் என்றும் கூறுகிறான். அவ்வாறே செய்கிறான் அர்ஜுனன். இறுதியில் பவளக்கொடி அவர்களுடைய திட்டத்தை அறிந்து கொள்கிறாள்.

பவளக்கொடியை மணந்து கொண்டால் பவளக்காடு தனக்குச் சொந்தமாகிவிடும் என்ற எண்ணம் அர்ஜுனனுக்குத் தோன்றுகிறது. இதனைக் கிருஷ்ணனிடம் கூறுகிறான். கிருஷ்ணனும் அதற்கு சம்மதிக்க, பவளக்கொடி அர்ஜுனனுக்கு மாலை சூடுகிறாள். அல்லி கையில் கத்தியோடு அர்ஜுனனைத் தேடி வருவதாகக் கிருஷ்ணன் கூறுகிறான். அர்ஜுனன் தலை போய்விடுமே என்று கிருஷ்ணன் காலை பிடித்துக் கொண்டு தன்னை காப்பாற்றுமாறு கேட்க கிருஷ்ணனும் அதற்கு ஒரு திட்டம் இருப்பதைக் கூறுகிறான்.

அதாவது, அர்ஜுனன் இறந்தவன் போல நடிக்க வேண்டும், அவனுடைய மனைவிமார்கள் எவருக்கும் கோபம் வராமல் ஒரு நாடகம் நடத்துவதாகக் கிருஷ்ணன் கூறுகிறான். அதேபோல் அர்ஜுனன் நடிக்க அல்லி, சுபத்திரை, பவளக்கொடி, நாககன்னி, பாஞ்சாலி, மின்னல் ஒளி என்னும் மனைவிமார்கள் அவனைத்தேடி வந்து அழுகின்றனர்.

இரண்டாவது தளத்தில் உடை ஒப்பனை அறையில் கலைஞர்கள் ஒப்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு அல்லி வேடம் போட்ட பெண்ணிடம் நாடக தரகனான அவன் கணவன் அவளுடைய தங்கையைத் தனக்கு மனைவியாக்கிக் கொள்ளுவதற்குச் சம்மதம் கேட்டுச் சண்டை போடுகிறான்.

அல்லியாக நடிக்கும் தரகனின் மனைவி செண்பகம் ஆண்களோடு சேர்ந்து நடித்து வசனம் பேசினாலும் அந்த ஆண்களுடன் அவர்களுக்குத் தொடர்பு இருப்பதாக தரகன் சந்தேகப்படுகிறான். வேறு எவனாவது அவள் தங்கையை தூக்கிக் கொண்டு போவதற்குள் தனக்கு மனைவியாக ஆக்கிக் கொண்டால் அவள் சம்பளத்தை வைத்து குடும்பம் நடத்தலாம் என்று தங்கையைத் திருமணம் செய்து வைக்குமாறு அல்லியிடம் வற்புறுத்துகிறான். அதற்கு அவள் 'குடும்பம் நடத்த வக்கில்லைன்னா காவிய கட்டிக்கிட்டு பிச்சை எடுக்கப்போடா' (கரு.அழ.குணசேகரன், பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு, ப.19) என்று கோபமாக கூறுகிறாள். அவளைத் தரகன் அடிக்க வருகிறான். இப்படியாக இரண்டாவது தளத்தில் காட்சி நிகழ்கிறது. ஒரு தளத்தில் பெண் கலைஞர்களின் பவளக்கொடி நாடகம் நடைபெறுவதும், இன்னொரு தளத்தில் பவளக்கொடி நாடகத்தில் வேடம்பூண்ட பெண்களின் ஒப்பனை அறையில் பெண் கலைஞர்கள் வாழ்வியல் காட்சிகள் நிகழ்வதுமாக இந்நிலையில் பவளக்கொடி நாடகத்தின் வடிவம் அமைந்துள்ளது.

கலைத்துறையில் ஈடுபட்டு வரும் பெண்கள் ஆண்களால் பல தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். கலைத்துறையில் ஈடுபடும் அவர்களை கேவலமாக பார்ப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை அத்தொழிலில் தொடர்ந்து ஈடுபடவும் விடுவதில்லை. அவர்கள் வீட்டிற்குள்ளேயும், வெளியேயும் பல இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள். வீட்டில் என்பது இங்கு கணவன், அப்பா, அண்ணன், தம்பிகள் மூலம் படும் தொல்லைகள். வெளியில் என்பது நாடகத் தரகர்கள், நடிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண்கள், பார்வையாளர்கள் முதலானவர்கள் மூலம் தொல்லைகள் என்று கூறலாம்.

"தமிழகத்தில் பெண்கள் அரங்கத் துறையில் ஈடுபடத் தொடங்கிய வரலாறு அரை நூற்றாண்டு கால வரலாறுதான். பாலாம்பாளின் பெண்கள் குழு, பிற சபாக்களில் பங்கேற்றுத் தனி முத்திரை வகித்த பெண்கள், ஆண் வேடம் தரித்த கே.பி.சுந்தராம்பாள், விடுதலை இயக்கச் சார்புடைய கலைக்குழுக்களில் செயல்பட்ட பெண்கள் எனப் பெண்களது அரங்கப் பங்கேற்பு இருந்துள்ளது". (Mangai, 2001)

பெண்கள் அரங்கத்தில் பங்கேற்றாலும் பின்வந்த காலகட்டங்களில் குறைந்து விட்டது. அதற்கு காரணம் அவர்கள் ஆண்களால் படும் துன்பங்கள் எனலாம். "இதனையும் தொழில் முறைப்பெண்கள் பெண் கலைஞர்கள் தலைமை தாங்கி நடத்தக்கூடிய 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நமது சமூகத்தில் உள்ளன. இவ்வாறு பெண்கள் தொழில் முறை நாடகக் கலைஞர்களாக வரும் பொழுது அவர்களுடைய குடும்ப வாழ்க்கை உடைந்து விடுகின்றது. அரங்கத்திற்கு ஒரு பெண் வந்துவிட்டாலே அவளுடைய

அகவாழ்க்கை என்பது பல்வேறு வகைகளில் சின்னாபின்னாமாகிறது" என்று மங்கை தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் நிலை, கல்வி, திருமணம், வேலை போன்ற நிலைகளை எடுத்து கூறும் வகையில் பெண்ணிய நாடகங்கள் திகழ்கின்றன. "பெண்ணிய நாடகங்கள் என்றால் அது சமீப காலப் பிரச்சனைகள் என்று பலவற்றைப் பேசும் போது ஒட்டுமொத்தமாக உள்ள பொருண்மையில் கருத்து ரீதியான ஒன்றாக மட்டும் தன்னைச் செதுக்கிக் கொள்வது அல்ல. நாடக உத்திகள், சம்பிரதாயமுறையிலான பாத்திர வார்ப்புகள், தீர்மானிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளைச் சாதிக்க பால் வேறுபாட்டு உணர்வுகள் போன்றவற்றிற்கு உருவாக்கப்பட்ட பதில் சொல்லுவதற்காகத் தோன்றியவையாகப் பெண்ணிய நாடகங்கள் இருந்தன". (Jeeva, 2007)

ஆக, புராண காலத்தில் ஒருத்தியை தவிர வேறு ஐந்து பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் கணவன்மாரைக் கண்டிக்க முடியாமல் இருந்த நிலை; இக்காலத்தில், அக்காலத்துப் பெண்களைப் போல் ஏமாளியாக இல்லாமல் கணவன் கேட்டதும் தன் தங்கையைக் கணவனுக்கு மணம் முடித்துக் கொடுக்க மறுப்பது, நடிப்பதை நிறுத்திவிடு என்று கணவன் வற்புறுத்தினாலும் நடிப்பதைத் தொடர்வது, தன்னைக் கேவலமாகப் பேசுவதை, அதாவது அவளுடன் வேலை செய்பவர்களுடன் இணைத்து சந்தேகப்படுவதைத் தட்டிக் கேட்பது, ஆகிய செயல்களால் இன்றையப் பெண்கள் துணிச்சல் மிக்கவர்கள் என்று காட்சிப்படுத்தப்படுகிறார்கள் இரு வேறு நாடகத்தில் இரண்டு விதமான பெண்களின் நிலை சுட்டப்படுகிறது.

"காலம் காலமாக அடிமைப்பட்டு வதைப்பட்டு வாழும் பெண்களை அடிமைத்தளையில் இருந்து மீட்டு அவர்களுக்குக் கல்வியின் மூலம் விழிப்புணர்வு ஊட்டி சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பினை பெற்று தருவது பெண்ணியத்தின் நோக்கமும் செயல்பாடும் ஆகும்".(இரா.பிரேமா, பெண்ணியம், ப.3) அக்காலத்தில் பவளக்கொடி, கணவன் மீது கொண்ட பாசம், அன்பு, நேசம் காரணமாக அவனைத் தண்டிக்க முடியாமல் இருக்கிறாள். இக்காலத்தில் உள்ள அல்லியாக நடிக்கும் தரகரின் மனைவி தன்னையும் தன் தங்கையையும் தொந்தரவு செய்யும் கணவனைக் கேள்வி கேட்கிறாள். கேட்பதோடு மட்டுமல்லாமல் தொடர்ந்து தொந்தரவு செய்து கொண்டே இருக்கும் அவனை விரட்டியே விடுகின்றாள். ஆக அக்காலத்தைப் போன்று கணவன் செய்யும் செயல்களுக்கு எவ்வித கேள்வியும் கேட்காமல் அடிபணியும் நிலையைக் காட்டாமல் இக்காலத்தில் துணிவான, தைரியமான பெண்ணாக ஆசிரியர் இந்நாடகத்தில் படைத்துள்ளார்.

## முடிவுரை

தமிழ் நவீன நாடகங்களில் சமகால பிரச்சனைகளை மையமிட்ட கருத்துக்கள் தொன்ம நாடகங்களின் வழியாக மீட்டுருவாக்கம் செய்யப்படுகின்றன. அந்த வகையில் ந.முத்துசாமியின் படுகளம் நாடகமும், கரு.அழ.குணசேகரனின் பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு என்ற நாடகமும் இக்கட்டுரையின் எல்லை பரப்பாக அமைகின்றது. இவ்விரு நாடகங்களிலும் நாடகத்துள் நாடகமாக பெண்ணின் பிரச்சனைகள் பேசப்பட்டுள்ளன. இதன் மூலம் பெண் சார்ந்த கருத்தாக்கங்கள் கலைகளினூடாக மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்பது புலனாகின்றது.

## References

Jeeva, M. (2007) Feminist theory. Postmodernism, Sagave Pathipagam Neloor, India

Mangai, A. (2001) Pen - Arangam – Tamilsoolal, Sneha, Chenani, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License